புதுச்சேரி அரசு

போக்குவரத்துத் துறை

***

**No.1/TD/EDP/PARIVAHAN-SEVA** புதுச்சேரி, தேதி: 29.03.2017

<u>செய்திக் குறிப்பு</u>

**<u>ஓட்டுனர் உரிமம் பெற இணையதளம் மூலம் விண்ணப்பம் செய்யும் முறை வில்லியனூர் மற்றும் பாகூர் தாலுகாவில் 03.04.2017 முதல் அறிமுகம்</u>**

புதுச்சேரி போக்குவரத்துத் துறையின் அனைத்து சேவைகளும் கணிணிமயமாக்கப்பட்டுள்ளன. போக்குவரத்துத் துறையில் ஓட்டுனர் உரிமம் பெறுவதற்கு இணையதளம் வாயிலாக விண்ணப்பம் செய்யும் நடைமுறை புதுச்சேரி உழவர்கரை RTO அலுவலகத்தில் 22.01.2016 முதலும், புதுச்சேரி RTO அலுவலகத்தில் 27.07.2016 முதலும் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகிறது. இதன் தொடர்ச்சியாக வில்லியனூர் மற்றும் பாகூர் தாலுகாவிற்கும் இணையதளம் வாயிலாக ஓட்டுனர் உரிமம் பெறுவதற்கான நடைமுறை வரும் 03.04.2017 முதல் அமுலுக்கு வருகிறது.

இணையதளம் வாயிலாக பழகுனர் உரிமம் மற்றும் ஓட்டுனர் உரிமம் பெற விண்ணப்பம் செய்பவர்கள், பழகுனர் உரிமம் மற்றும் ஓட்டுனர் உரிமம் பெறுவதற்கான தேர்வுக்கு வரும் பொழுது தாம் இணையதளம் வாயிலாக செய்த விண்ணப்பத்தை பதிவிரக்கம் செய்து அத்துடன் அசல் சான்றிதழ்களையும் அவற்றின் நகல்களையும் கொண்டுவருதல் வேண்டும். சான்றிதழ்கள் சரிபார்த்தபின் உரிய தேர்வுக்கு அனுமதிக்கப்படுவார்கள். தேர்வின் முடிவுக்கு ஏற்ப உரிமம் வழங்கப்படும் அல்லது மறுக்கப்படும்.

இணையதளம் வாயிலாக போக்குவரத்துத் துறையின் சேவைகளை பெறுவதற்கு கீழ் கண்ட வகையில் இணையதளத்தின் வாயிலாக விண்ணப்பம் செய்யலாம்.

(i) ஒருவர் தாமாக கணிணியின் மூலம் விண்ணப்பம் செய்யலாம்.

(ii) பள்ளி மற்றும் கல்லூரி மூலமாக விண்ணப்பம் செய்யலாம்.

(iii) மோட்டார் வாகன ஓட்டுனர் பயிற்சி பள்ளிகளின் மூலமாக விண்ணப்பம் செய்யலாம்.

(iv) பொது சேவை மையம் (Common Service Centre) மூலமாக விண்ணப்பம் செய்யலாம்.

புதுச்சேரியிலுள்ள பள்ளி மற்றும் கல்லூரிகள் புதுச்சேரியில் உள்ள ஓட்டுனர் பயிற்சி பள்ளிகள் ஆகியன போக்குவரத்துத் துறையினை அணுகி விண்ணப்பம் செய்து தமக்குறிய இணையதள பயன்பாட்டு முகவரி மற்றும் விபரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

(எஸ்.டி.சுந்தரேசன்)

போக்குவரத்து ஆணையர்